1978 மார்ச் 6]

உயர்நிலைப் பள்ளிகளில் பொறியியல் ஆசிரியர்கள்.

*409 வினா—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள பொறியியல் ஆசிரியர்களுக்கு (Engineering Instructors) இன்னும் தேர்வு நிலைத் தகுதிகள் வழங்கப்படாமை குறித்து கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) இக்கோரிக்கையின்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) இக்கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளவேண்டியதில்லை என அரசாணை எண். 333 கல்வி, நாள் 14—2—77-ல் ஆணை வெளியிடப்பட்டது. அவ்வரசாணையினை மீண்டும் மறுபரிசீலனை செய்து தேர்வுநிலை அளிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். அக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. சிவசாமி : உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள பொறியியல் ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலைத் தகுதிகள் வழங்கப்படாமல் நீண்ட நாட்களாக இருந்து கொண்டிருக்கிறது. அது சம்பந்தமாகப் பல தடவைகள் மந்திரி அவர்களிடத்திலும், டைரக்டர் அவர்களிடத்திலும் நேரடியாகச் சொல்லியும்கூட இன்று வரை அது சம்பந்தமாகப் பரிசீலிக்கப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. அது பற்றி எப்போது முடிவு எடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்தப் பரிசீலனை முடிந்தவுடன் முடிவு அறிவிக்கப்படும்.

பிஷப் ஹிபர் உயர்நிலைப்பள்ளி, புத்தூர்

*410 வினா—திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி, புத்தூரில் இருக்கும் பிஷப் ஹிபர் உயர்நிலைப்பள்ளி செயல்படாமல் இருக்கிறதா ?

(ஆ) ஆம் என்றால், எத்தனை காலம்?

(இ) இதனால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரகங்நாயகம்: (அ) மற்றும் (ஆ) 31-10-77 முதல் 15-1-78 வரை இப்பள்ளி செயற்படாமலிருந்தது.

(இ) 1,800.

பூம்புகர் பகுதியில் தொல்பொருள் ஆய்வு.

*411 வினா—திரு. என் கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித்துறை பூம்புகார் பகுதியில் இதுவரையில் ஆராய்ந்து கண்டறிந்தவற்றை அரசுக்கு அறிவித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மத்திய தொல் பொருள் ஆராய்சித்துறை பூம்புகார் பகுதியில் நடத்திய ஆய்வு குறித்து அரசுக்கு எவ்விதத் தகவலும் அனுப்பவில்லை.

(ஆ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா: மத்திய தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்தினர் பூம்புகாரில் அத்தகைய முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள். ஐம்பெருங் காப்பியங்களான சிலப்பதிகாரம் மணிமேகலை போன்றவற்றில் கூறப்பட்டுள்ளபடி பூம்புகார் பகுதியில் நகர அமைப்பு இருந்தது என்பது பற்றியெல்லாம் தெரிய வருகிறது. அத்தகைய தடயங்கள் அகப்பட்டுள்ளன என்றால் அதுபற்றி இனியேனும் அரசு அறிந்து கொள்ள முயற்சிகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மத்திய அரசின் தென் வட்ட தொல்பொருள் ஆய்வுத் துறை காவிரிப்பூம்பட்டினத்துக்கு அருகிலுள்ள காவிரி டெல்டா பகுதியில் 40 முக்கிய இடங்களைத் தேர்ந்தெடுத்திருந்தபோதிலும், சென்ற 1963 ஆம் ஆண்டிலிருந்து